2012 ஏப்ரல் 20]

138—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***1960—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை என் சிரம் தாழ்ந்து, பாதம் பணிந்து வணங்கி, என்னைத் தகவல் தொழில்நுட்ப அமைச்சராக நியமனம் செய்து, இம்மாமன்றத்தில் வினாவிற்கான பதிலை அளிக்க வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களைப் பாதம் பணிந்து வணங்கி, என் பதிலை அளிக்கின்றேன் அம்மா. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். சேலம் மாவட்டம், ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்தில் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க அரசு முடிவெடுத்து, அதன்படி அரசு, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு 164.26 ஏக்கர் நிலம் உரிமை மாற்றம் செய்துள்ளது. மேலும், இந்தப் பூங்காவில் முதற்கட்டமாக ரூபாய் 10 கோடி செலவில் 53.33 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்திற்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.*

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம்-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையிலே தகவல் தொழில்நுட்பப் பூங்காவினுடைய வேலைகள் நடைபெற்று*

வருகின்றன. ஆனால், ELCOT-இலே விண்ணப்பம் செய்வதற்குக் குறைந்தபட்சம் 50 இலட்சம் ரூபாய் மென்பொருள் ஏற்றுமதி செய்திருந்தால்தான், இடம் தகுதியுள்ள நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் என்ற விதியிருப்பதாலே, ஒரே ஒரு விண்ணப்பம் மட்டும் வந்திருப்பதாக அறிகின்றேன். ஆகையினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சிறு மென்பொருள் நிறுவனங்களுக்கு வாய்ப்பளிக்கின்ற வகையிலே அந்த விதியைத் தளர்த்திக் கொடுப்பாரா; அல்லது சேலம் மாவட்டம், நாமக்கல், கிருஷ்ணகிரி, தருமபுரி போன்ற மாவட்டங்களிலே இருக்கின்ற தகவல் தொழில்நுட்ப மாணவர்கள் பயன்பெறுகின்ற வகையிலே, பெரிய மென்பொருள் நிறுவனங்களான Infosys, Cognizant Technology, TATA Consultancy, WIPRO, HCL போன்ற நிறுவனங்களோடு கலந்து, அவர்களுக்குச் சலுகை அளித்து, அந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்காவிலே மென்பொருள் நிறுவனங்கள் அமைக்க அமைச்சர் ஆவன செய்வாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கிணங்க, அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) திரு. பிரின்ஸ், என்ன யோசனையில் இருக்கிறீர்கள்?

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 42 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான மாணவர்களை ஆண்டொன்றுக்கு வல்லுநர்களாக அனுப்பிக் கொண்டிருக்கின்ற அந்த மாவட்டத்தில் ஒரு Techno Park அமைத்துத் தரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

2012 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள். அவர் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு* Techno Park *கேட்கிறார்.*

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 139, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

139—

புதிய காப்பீட்டுத் திட்டம்

***3674—டாக்டர் க. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு புதிய காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பட்டியல் இனத்தவர் நடத்தும் மருத்துவமனைகளையும் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புதிய காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் எந்த ஒரு பாகுபாடுமின்றி, தகுதிவாய்ந்த அனைத்து மருத்துவமனைகளுக்கும், பட்டியல் இனத்தவர் நடத்தும் மருத்துவமனைகள் உட்பட, அம்மருத்துவமனைகளுக்குத் தேவைப்படும் தகுதிகளும், தரமும் அவை பெற்றிருப்பின் அவை முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்தும் காப்பீட்டு நிறுவனம், United India Insurance *நிறுவனம் மருத்துவமனைகளின் அனுமதி மற்றும் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின்* Empanelment and Disciplinary Committee *ஒப்புதல் பெற்று மருத்துவமனைகளுக்கு அங்கீகாரம் வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*